**பிப்ரவரி – 09**

# TNPSC துளிகள்

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் லடாக் பகுதியின் முதலாவது பல்கலைக்கழகமான லடாக் பல்கலைக்கழகத்தை பிரதமர் துவக்கி வைத்தார்.
- அமெரிக்காவில் நடைபெற்ற ஸ்குவாஷ் இறுதிப்போட்டியில் எகிப்தைச் சேர்ந்த முகமது எல் செர்பினியை வீழ்த்தி இந்திய ஸ்குவாஷ் வீரர் ரமீத் தண்டேன் 2019 ஆம் ஆண்டின் சியாட்டல் ஓபன் பட்டத்தை வென்றார். இது அவருடைய வாழ்நாளில் நான்காவது பட்டமாகும்.
- மத்திய அமைச்சரவையானது வருமான வரி மற்றும் மறைமுக வரிகளுக்கான குறைதீர் நிறுவனங்களை ஒழிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - வருமான வரி தொடர்பாக பொது மக்களின் புகார்களுக்கு தீர்வு காண்பதற்காக 2003 ஆம் ஆண்டில் வருமான வரி குறைதீர் அலுவலகம் உருவாக்கப்பட்டது.
- இந்தியா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய இரு நாடுகளுக்கிடையேயான உறவை மேம்படுத்துவதில் தன்னுடைய பங்கை செலுத்தியதற்காக இந்தியாவின் மிகப்பெரிய கடன் வழங்கும் எஸ்பிஐ வங்கியின் ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள பிராந்தியத் தலைமையக வங்கிக்கு “இலண்டன் நகரத்தின் சுதந்திரம்” என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- உலகின் நீர்த்த பெட்ரோலிய வளிமத்தின் (LPG – Liquified Petroleum Gas) இரண்டாவது மிகப்பெரிய நுகர்வோர் மற்றும் ஏற்றுமதியாளராக இந்தியா உருவெடுத்துள்ளது. இது விறகு மற்றும் மாட்டு சாணம் போன்ற பாரம்பரிய எரிபொருட்களுக்கு மாற்றாக தூய்மையான எரிபெருட்களுக்கான அரசின் முன்னெடுப்புகளுக்கு உந்து சக்தியாக விளங்குகிறது.
- மத்திய அமைச்சரவையானது திரைப்படத் துறை சட்டம் 1952-ஐ திருத்துவதற்கான மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை பரிந்துரைத்த திரைப்படத்துறை திருத்த மசோதா, 2019ற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - இந்த மசோதா அங்கீகரிக்கப்படாத திரைப்படங்களை வீடியோ எடுத்தல் மற்றும் போலியான திரைப்படங்கள் ஆகியவற்றிற்கு தண்டனைகள் வழங்குவதன் மூலம் திருட்டுத் திரைப்படங்கள் தொடர்பான பிரச்சனைகளை சமாளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மகாராஷ்டிராவைச் சேர்ந்த இளம் கலைஞரான சசிகாந்த் பாட்டீல் CIMA (Centre of International Modern Art) விருதின் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.
- அர்ஜெண்டினாவிற்கான இந்தியாவின் அடுத்தத் தூதராக தினேஷ் பாட்டியா நியமிக்கப்பட்டுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## முறைப்படுத்தப்படாத வைப்புத் திட்டங்களை தடை செய்வதற்கான திருத்த மசோதா, 2018

- மத்திய அமைச்சரவையானது முறைப்படுத்தப்படாத வைப்புத் திட்டங்களை தடை

செய்வதற்கான திருத்த மசோதா, 2018-ற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- இந்தத் திருத்தமானது நாட்டின் சட்ட விரோத வைப்பு நடவடிக்கைகளின் அச்சுறுத்தல்களை திறம்பட கையாளும் அதன் நோக்கத்திற்கு மேலும் வலு சேர்க்கும்.

## பர்மானு டெக் 2019

- பர்மானு டெக் கருத்தரங்கானது மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் இந்திய அணு சக்தித் துறையால் ஒருங்கிணைக்கப்பட்டது.
- இந்தக் கருத்தரங்கின் முக்கிய நோக்கம் இந்தியாவின் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுடன் கூடிய அணு சக்தித் திறனை வெளிப்படுத்துவதாகும்.
- இக்கருத்தரங்கின்போது பின்வரும் தலைப்புகளின்கீழ் குறிப்பிட்ட துறைகளுக்கான அமர்வுகள் நடைபெற்றன.
    - சுகாதார நலம் : அணு சக்தி மருந்தகம் மற்றும் கதிர்வீச்சு மருத்துவம் – நோயை குணப்படுத்துவது.
    - உணவுப் பாதுகாப்பு, விவசாய மற்றும் தொழிற்சாலைப் பயன்கள்: விவசாயிகளிடமிருந்து தொழிற்சாலைகளுக்கு - தேசிய நலனுக்காக பாடுபடுவது.
    - இந்தியாவின் அணுசக்தித் திறனை வெளிக்கொணர்தல் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுடன் கூடிய அணுசக்தித் துறை.

## சென்டினலீஸ் பழங்குடியினர்களின் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்

- சென்டினலீஸ் பழங்குடியினர்களின் நல்வாழ்வு மற்றும் உரிமைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்திய அரசு பல்வேறு சட்டங்கள்/ஒழுங்குமுறைகளை அவ்வப்போது வெளியிட்டு வருகிறது.
- சட்டங்கள் / ஒழுங்குமுறைகள் ஒன்றியப் பிரதேசத்தினால் கண்டிப்பாக செயல்படுத்தப்படுகின்றன. இது பின்வருவனவற்றை கொண்டிருக்கும்.
    - அந்தமான் நிகோபார் தீவுகள் (PAT) ஒழுங்கு முறைகள், 1956
    - பட்டியலிடப்பட்ட பிரிவினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (வன்முறைகள் தடுப்பு) சட்டம், 1989
    - வெளிநாட்டினர் செல்லத் தடை செய்யப்பட்ட பகுதிகளின் ஆணை, 1963-ன் கீழ் கட்டுப்பாடுகள் உள்ள பகுதிகள்.
    - விசா கையேடு நிபந்தனைகள் / கடவுச்சீட்டு சட்டம், 1920 மற்றும்
    - இந்திய வனச் சட்டம், 1927 மற்றும் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972.
- இவை தவிர, சென்டினலீஸ் பழங்குடியினர்களைப் பாதுகாக்க பின்வரும் முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
    - உயர் கடல் நீர் பகுதியிலிருந்து 5 கிலோ மீட்டருடன் வட சென்டினல் முழுவதும் பழங்குடியினர் உள்ள பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.
    - இந்திய அரசு சென்டினலீஸ் மக்களின் வாழ்க்கை முறைகளுக்கு மதிப்பளிக்கிறது. எனவே, சென்டினலீஸ் பழங்குடியினர்களைப் பாதுகாப்பதற்காக “முழுக் கவனம் மற்றும் கட்டுப்பாடுகள்” என்ற

நடைமுறையை ஏற்றுக் கொண்டுள்ளது.

- வட சென்டினல் தீவின் கடல் பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள நெறிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- கடலோரக் காவல்படையின் கப்பல்கள் மற்றும் விமானங்கள், கடலில் உள்ள காவல் துறைப் படகுகள் ஆகியவை வட சென்டினல் தீவினைச் சுற்றி கண்காணிப்பினை மேற்கொள்கின்றன.

# சர்வதேசச் செய்திகள்

## ஆசியா LPG மாநாடு

- ❖ ஆசியா LPG மாநாட்டின் இரண்டாவது பதிப்பானது மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சரால் புது தில்லியில் துவக்கி வைக்கப்பட்டது.
- ❖ இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த சந்திப்பின் கருத்துரு “LPG - வாழ்விற்கான ஆற்றல்“ என்பதாகும்.
- ❖ இந்தச் சந்திப்பானது உலக LPG மன்றத்துடன் (WLPGA - World LPG Association) முக்கியமான இந்திய எண்ணெய் சந்தைப்படுத்துதல் நிறுவனங்களான இந்தியன் ஆயில் நிறுவனம், இந்துஸ்தான் பெட்ரோலியம் மற்றும் பாரத் பெட்ரோலியம் ஆகியவை கூட்டாக இணைந்து நடத்தப்பட்டது.

## NATO - மாசிடோனியா

- ❖ அமெரிக்கா தலைமையிலான கூட்டணி நாடுகளின் படையான நேட்டோவில் 30வது உறுப்பினராக மிகச் சிறிய நாடான முன்பு யுகோஸ்லேவியாவில் இருந்த மாசிடோனியா இணைய அனுமதிப்பதற்கு நேட்டோ உறுப்பினர்கள் மாசிடோனியாவுடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளனர்.
- ❖ மாசிடோனியாவின் மீது கிரீஸ் நாட்டின் 27 ஆண்டு கால பிரச்சனை முடிவடைந்ததையடுத்து இந்த ஒப்புந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- ❖ இந்தக் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்த ஆவணங்கள் நேட்டோ குழுவின் அமைச்சரவை நிலையிலான சந்திப்புகளின் மாசிடானியா ஒரு அழைப்பாளராக பங்கு கொள்ள அனுமதிக்கிறது.
- ❖ இந்த குழுவில் முழு உறுப்பினர் அந்தஸ்து பெறுவதற்கு, தற்பொழுதுள்ள 29 நாடுகள் இணக்கத்திற்கான நெறிமுறைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

### *வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு*

- ❖ வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு என்று (NATO - North Atlantic Treaty Organisation) வாஷிங்டன் ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இராணுவ மற்றும் அரசியல் கூட்டணியாகும்.
- ❖ நோட்டோ அமைப்பானது ஜனநாயக உரிமைகளை ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் இக்குழு பிரச்சனைகளைத் தீர்ப்பது, நம்பிக்கையை வளர்ப்பது, நீண்ட கால மோதலைத் தடுப்பது, பாதுகாப்புத் தொடர்பான பிரச்சனைகள் பற்றி உறுப்பினர்களிடையே ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பை ஏற்படுத்துகிறது.

- வாஷிடங்கடன் உடன்படிக்கையின் ஷரத்து 5-ன்படி, ஏதேனும் ஒரு உறுப்பு நாட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவத் தாக்குதலானது அனைத்து உறுப்பு நாடுகளின் மீதான தாக்குதலாகக் கருதப்படும். மேலும் தேவை ஏற்பட்டால் உறுப்பு நாடுகள் தாக்குதல் நடத்தப்பட்ட நாட்டிற்கு உதவி செய்யும்.

### தேசிய நீர்வாழ் விலங்கு - தாய்லாந்து

- தாய்லாந்து நாட்டின் நீர்வாழ் விலங்காக 'சியாமீஸ் சண்டையிடும் மீன்' என்ற இனத்தை அறிவிப்பதற்கான பரிந்துரைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- தாய்லாந்தின் தேசிய அடையாளக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த மீன் இனத்தை எற்றுக் கொள்ளுவதன் மூலம் தாய்லாந்து நாட்டின் கலாச்சார பெருமையை ஊக்குவிக்கிறது.




- தாய்லாந்து நாட்டின் சியாமிஸ் சண்டையிடும் மீனின் கலாச்சாரம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் காரணமாக அரசாங்கம் இந்த முன்மொழிவுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- சியாமீஸ் சண்டையிடும் மீனானது அதன் வாழிடம், அந்த நாட்டிற்கான தனித்துவ இனம் மற்றும் தாய்லாந்து பொருளாதாரத்தின் முக்கிய விலங்கு என்பதால் அந்த இனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## பொருளாதாரச் செய்திகள்

### 36வது சர்வதேச IP குறியீடு 2019

- உலகின் முதல் 50 பொருளாதாரங்களுக்கான வருடாந்திர சர்வதேச IP குறியீட்டை அமெரிக்க தொழில் மற்றும் வர்த்தக சங்கம் வெளியிட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில், இந்தியா 44-வது இடத்திலிருந்து 8 இடங்கள் முன்னேறி 36-வது இடத்தில் உள்ளது.


- இந்தக் குறியீட்டில் அமெரிக்கா முதல் இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் 67-வது இடத்திலும் வெனிசுலா கடைசி இடத்திலும் உள்ளது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### இந்தியப் பாரம்பரிய வாக் திருவிழா

- யுனெஸ்கோவுடன் இணைந்து சாகாபீடியா, 2019 ஆம் ஆண்டிற்கான இந்தியப் பாரம்பரிய வாக் திருவிழாவின் இரண்டாவது பதிப்பை நடத்தியது.
- மேலும் இது தேசிய கனிமப்பொருள் வளர்ச்சி நிறுவனத்தால் ஆதரிக்கப்பட்டது.




- இத்திருவிழாவானது வரலாற்றுடன் தொடர்புடைய மறைந்துள்ள இரத்தினங்களை கண்டுபிடிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது.
- இந்தப் பாரம்பரிய வாக் திருவிழாவானது விருந்தாவனின் உள்வெட்டுத் தகட்டினால் காகிதத்தை வெட்டி உருவாக்கும் கலையான "சன்ஜ்ஹியை" மும்பையின் பந்த்ராவில் அறிமுகப்படுத்த முடிவெடுத்துள்ளது.

- இந்தத் திருவிழாவின் முதலாவது பதிப்பானது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரப் பிரிவில் 2018 ஆம் ஆண்டின் பேட்டா தங்க விருதினை வென்றுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## சுழிய இறப்புப் பெருவழிப் பாதை

- டெல்லி அரசாங்கம் விபத்துகளின் எண்ணிக்கையைக் குறிக்கும் நோக்கத்துடன் சுழிய இறப்புப் பெருவழிப்பாதையைத் தொடங்கியுள்ளது.
- சாலைப் பாதுகாப்பு வாரத் தொடக்க விழாவின்போது டெல்லியின் போக்குவரத்துத் துறை அமைச்சரால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- 3 கிலோ மீட்டர் தொலைவுள்ள பல்சாலா சௌக் மற்றும் புராரி சௌக் ஆகிய இடங்களுக்கு இடையே வெளிப்புற மோதிர சாலையில் இது தொடர்பான ஆய்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- விபத்துகள், சாலைப் பொறியியல், சாலையைப் பயன்படுத்துவோர்கள் ஆகியோரைக் கொண்டு அறிவியல் பூர்வ ஆய்வுக்காக இந்த 3 கிலோ மீட்டர் பாதையானது கண்காணிக்கப்படும்.
- மேலும் இந்த பெருவழிப் பாதையில் காவல் துறை கண்காணிப்பு மற்றும் அவசர கால உதவி போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் உறுதி செய்யப்படும் என்று வல்லுநர்கள் உறுதியளித்துள்ளனர்.
- இது டெல்லியில் உள்ள சாலைகளில் ஏற்படும் விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைப்பதற்காக டெல்லி போக்குவரத்து காவல்துறையுடன் இணைந்து போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, பொதுப் பணித் துறை ஆகிய துறைகளால் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.

------------